ஏப்ரல் மாதம் 13ம் திகதி 4:59 மணிக்கு தமிழ்ப் புத்தாண்டு "விசுவாசு" பிறந்தது. இப்புத்தாண்டை நம் மன்ற உறுப்பினர்கள் மிகவும் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தோம். தமிழர்கள் வருட த்தை சுவாத்திய அடிப்படையில் ஆறு பருவ காலங்களாகப் பிரித்தார்கள். அந்த அடிப்படையில் தமிழ் புத்தாண்டு இளவேனில் காலத்தில் உதிக்கிறது. இளவேனில் காலத்தில் சூரிய வெப்பம் மற்றும் புளுக்கம் குறைவாகவும், ஆனால் பிரகாசம் அதிகமாக் காணப்படும். இப்பருவ காலத்தில் தென்றல் காற்று வீசும். இளவேனில் கால தென்றல் காற்றின் சுகத்தை திருநாவுக்கரசு நாயனார் இறை இன்பத்திற்கு ஒப்பிடுகிறார்: திருநாவுக்கரசு நயனாரை துன்புறுத்துவதற்காக சமணர்கள் அவரை சுண்ணாம்பு நீற்றறையில் இட்டபோது அவருக்கு இறைவன் அருளால் எவ்வித வாதையோ துன்பமோ ஏற்படவில்லை. இதமாக அவர் அனுபவித்த இறை இன்பத்தை இளவேனில் காலத்து சுகத்துக்கு இணையாக இப்படிப்பாடுகிறார்:



மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

இளவேனில் காலத்தில் பூக்கும் தமிழ் புத்தாண்டின் சுகத்தை வருடம் முழுவதும் முது தமிழர் மன்ற உறவுகள் அனுபவிக்க மனதார வாழ்த்துகிறேன்.

தமிழ்ப் புத்தாண்டு மட்டுமா நம் மன்றம் கொண்டாடி மகிழ்கிறது? புத்தாண்டைத் தொடர்ந்து யேசு பிரானின் உயிர்ப்பு விழாவையும் ஏப்ரல் 25ல் மிகவும் சிறப்பாக ;யேசுவின் போதனைகள் மத எல்லைகளுக்கு அப்பால் மொத்தமாக மனிதகுலத்திற்குப் பொதுமறையாக வளங்கப்பட்ட நற்செய்தி என்பதை மனதார உணர்ந்து அர்த்த பூர்வமாக கொண்டாடினோம்: நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட சிலுவயை நாம் சுமந்தபின் நிட்சயம் மீட்புண்டு என்பதை யேசுவின் உயிர்ப்பு உறுதிப்படுத்துகிறது என்பதை போதகர் செல்வரட்ணம் அவர்கள் தெளிவாக உரைத்தார்.

மேற்கூறிய விழாக் கொண்டாட்டங்கள் மூலம் நம் மன்றத்தின் பிரதான நோக்கம் நிலைநிறுத்தப்படுகிறது: ஒன்றே குலம் ஒருவனே தெய்வம். இவ்விடயத்தில் நாம் நம் மன்றத்தின் செயற்பாடுகள் மூலம் தமிழ் உலகிற்கு முன்னோடியாக திகழ்வதையிட்டு நான் பெருமிதமடைகிறேன்.

நம் மன்றம் "மாணிக்கவிழா"வை வருகிற ஆங்கில ஆண்டில் கொண்டாடவிருக்கிறது . 40 வருட பயணத்தில் நம் மன்றத்தின் சாதனைகள் மலைபோன்றது என்பதை தமிழர் தகவல் அமைப்பு அங்கிகரித்து இவ்வாண்டுக்கான விருதை வழங்க்கியுள்ளது எம்மை மகிழ்ச்சிகொள்ளச் செய்கிறது. இந்த அங்கிகாரம் நம் தாயகம் வரை நமது பெருமையை வெளிப்படுத்தியுள்ளது நம்மை மேலும் உற்சாகப்படுத்துகிறது. இந்த உற்சாகத்தில் மாணிக்கவிழாவை நாம் எவ்வாறு உலகறிய கொண்டாடப்போகிறோம் என்பதை நாம் ஒருங்கிணைந்து திட்டமிடவேண்டும். இதற்கான ஆலோனையையும் ஆதரவையும் விழாகுழு உங்களிடம் நாடி நிற்கிறது. ஆகவே, ஊக்கமுடன் ஒன்றிணைவோம்; பாடுவோம் பாரறிய நம் மன்றின் புகழினை.

Manuel Jesudasan, Barrister, Solicitor & Notary
Public --MJ LAW
T: 416 444 8070/ 647 501 6293